# முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.
## அ.வ.எண்.118/2018

2025–ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 25–ம் நாளன்று வாதி / பிரதிவாதி சாட்சியாக பி.சா.2–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95–வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: T.P.K.பிரசாத்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**2 ஆம் பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 2 ஆம் பிரதிவாதி ஸ்ரீராம்சந்திர மிஷனின் தலைவரால் வழக்கை நடத்த நியமிக்கப்பட்ட நபர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

ஸ்ரீராம்சந்திர மிஷினின் தலைவர் அவர்கள் வழக்கு நடத்த அனுமதி அளித்து வழங்கிய சான்றிதழ் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.16,

11.02.2008 தேதியிட்ட ஸ்ரீராம்சந்திர மிஷின் பெயரிலான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.17,

25.03.2018 தேதியிட்ட சின்னதாராபுரம் காவல்நிலையத்தில் அளித்த புகார் மனு அசல் பி.சா.ஆ.18,

26.03.2018 தேதியிட்ட சின்னதாராபுரம் காவல்நிலைய மனு ரசீது நகல் பி.சா.ஆ.19,

18.11.2019 தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு W.A.(MD) Nos.1273 and 1274 /2019 சான்றிட்ட நகல் பி.சா.ஆ.20,

14.02.2019 தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு C.R.P.(MD) Nos.311/2019(PD) and C.M.P.(MD) No.1483/2019 சான்றிட்ட நகல் பி.சா.ஆ.21,

18.12.2015 தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு C.R.P.(MD) Nos.1972/2014 and M.P.(MD) No.1/2024 சான்றிட்ட நகல் பி.சா.ஆ.22,

அரவக்குறிச்சி உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.59/2019–ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.சா.ஆ.23,

அரவக்குறிச்சி உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.59/2019 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.சா.ஆ.24,

**(பி.சா.ஆ.23 மற்றும் பி.சா.ஆ.24 ஆவணங்கள் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீதிமன்ற ஆணையர் மூலம் தான் குறியீடு செய்யப்பட வேண்டும் என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. )**

வீட்டு வரி ரசீது மற்றும் கிஸ்து ரசீது அசல் பி.சா.ஆ.25,

மின்சார கட்டணம் ரசீது (2 எண்ணிக்கை) பி.சா.ஆ.26,

சர்வே எண்.26/2A2, 26/2B2 –ன் பட்டா கணினி பதிவிறக்க நகல் பி.சா.ஆ.27,

சர்வே எண்.26/2A2, 26/2B2 –ன் சிட்டா கணினி பதிவிறக்க நகல் பி.சா.ஆ.28,

சர்வே எண்.26/2A2, 26/2B2 –ன் புல வரைபடம் கணினி பதிவிறக்க நகல் பி.சா.ஆ.29,

சர்வே எண்.26/2A2, 26/2B2 –ன் 1427 பசலி அசல் பி.சா.ஆ.30,

15.05.2008 தேதியிட்ட சர்வே எண்.26/2A மற்றும் 26/2B உட்பிரிவு செய்து அரவக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் வழங்கிய செயல்முறை ஆணை அசல் பி.சா.ஆ.31, **(பி.சா.ஆ.31 ஆவணம் குறித்து எந்தவொரு அறிவிப்பும் வாதி கோவிலுக்கு அனுப்பாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. )**

20.08.2025 தேதியிட்ட வில்லங்க சான்று (01.01.1975 முதல் 31.12.2006 வரை) கணினி பதிவிறக்க நகல் பி.சா.ஆ.32,

22.08.2025 தேதியிட்ட வில்லங்க சான்று (01.01.2007 முதல் 21.07.2025 வரை) கணினி பதிவிறக்க நகல் பி.சா.ஆ.33,

தாவா சொத்து குறித்த Digital புகைப்படம் மற்றும் தாவா சொத்தில் உள்ள ஸ்ரீ ராம்சந்திர மிஷன் கட்டிடத்தின் புகைப்படம் Pendrive Copy பி.சா.ஆ.34 ஆகியவை குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

**(பி.சா.ஆ.34 எங்கு, யாரால் எடுக்கப்பட்டது என்ற விபரம் குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. )**

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.